**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 10/2007**

**Witness DW 2**

பெயர் பெரியண்ணன் த/பெ சின்னராஜ்

இன்று (21.01.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**சத்தியமாக சொல்கிறேன்**

தாவா சொத்து 40 வது அயிட்டத்தை விற்றும் சண்முகம் என்பவரிடமிருந்து ரூ . 2 லட்சம் கடன் வாங்கியும் 6 ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்துவைத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மாணிக்கம் என்பவரிடமிருந்து ரூ . 50,000/- ராஜரத்தினம் என்பவரிடமிருந்து ரூ . 1 லட்சமும், இந்தியன் வங்கியிலிருந்து ரூ 3 லட்சமும் கடன் பெற்று எனது தகப்பனார் சின்னராஜ் என்பவருக்கு சிகிச்சை செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜீவானந்தம் என்பவரிடமிருந்து ரூ . 1 லட்சம் கடன் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதிக்காக வழக்கு நடத்துவதாக அவரிடம் சொல்லி வக்காலத்து கையெழுத்து வாங்கி வழக்கு நடத்தாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல . அவராகவே தான் தானாக வந்து வக்கிலிடம் வக்காலத்தில் கையெழுத்து போட்டார் . பிறகு வழக்கிற்கு வராமல் விட்டுவிட்டார் . தற்போது 6 ம் பிரதிவாதி வேறு வழக்கறிஞர்வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான் . 2008 ம் ஆண்டு நானும் 6 ம் பிரதிவாதியும் வாய்மொழியாக பாகம் பிரித்து வழக்கு சொத்துக்களை பிரித்து கொண்டோம் என்றால் சரிதான் . 3 ல் 1 பாகம் என்று 6 ம் பிரதிவாதி இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது . பொய்யான விவரங்களை நான் வழக்கில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதி 3 ல் 1 பாகம் கோருவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. அது போக 21 ல் 8 பாகம் 6 ம் பிரதிவாதி கோருவதில் ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது என்பேரில் உள்ளதை எனக்கு கொடுக்க வேண்டுகிறேன்.

(Sd/-A.Tamilselvan)
Principal Subordinate Judge,
Villupuram